[திரு. ஏ. தங்கராசு] [1987 ஏப்ரல் 4

இடைக்கால ஊதியமாக ஏதாவது ஒரு சம்பளம் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

(ஆ) திருப்பூர் நகருக்குக் குடிநீர் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. சுப்பராயன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார். உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. ஆகவே அறிக்கை அவையின் முன் வைக்கப்படுகிறது.

"திருப்பூர் நகருக்கு குடிநீர் வழங்க கடந்த 13—12—1983 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட இரண்டாவது குடிநீர்த் திட்டப் பணிகள் இன்னும் தொடங்கப்படாமல் காலதாமதம் ஆவது குறித்து".

அறிக்கை.

திருப்பூர் நகருக்குப் பவானி ஆற்றில் மேட்டுப்பாளையத்தை தலைமையிடமாகக் கொண்டு தினசரி 75 இலட்சம் லிட்டர் தண்ணீர் இறைக்கப்பட்டு வருகிறது. இதில் வழியோர கிராமங்களுக்கு 9 லட்சம் லிட்டர் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. திருப்பூர் நகரின் குடிநீர்த் தேவையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் பவானி ஆற்றைத் தலைமையிடமாகக் கொண்டு ரூ. 1,056.00 இலட்சம் செலவில் நிறுவ அரசு ஆணை (நிலை) எண் 1746, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள் 25—11—1983-ல் தற்காலிக நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. திருப்பூர் நகராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், ஆனூர், அவிநாசி, 15. வேலாண்டிபாளையம், திருமுருகன்பூண்டி ஆகிய நான்கு பேரூராட்சிகளும், 44 கிராம குடியிருப்புகளும் பயன்பெறும். திருப்பூர் நகரின் திட்ட மதிப்பீடு ரூ. 704.44 இலட்சம். அரசு ஆணை (நிலை) எண் 1763, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள் 28—11—1983-ல்

1987 ஏப்ரல் 4]

திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தலைமைப் பணியிடம் மற்றும் அலுவலர் குடியிருப்பு கட்ட 2.95 ஏக்கர் நிலம் தேக்கம்பட்டி கிராமத்தில் கையகப்படுத்தும் கருத்துருவிற்கு எதிராக நிலச் சொந்தக்காரர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந் துள்ளார். எஞ்சியுள்ள களப்பணிகளை செயலாக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்கு மண்டல தலைமைப் பொறியாளர் நடவடிக்கை எடுத்து வருவதாக மேலாண்மை இயக்குநர், தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்துள்ளார். மேலும் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரிய குடிநீர்த் திட்டங்களுக்குள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை எனக் கருதப்படும் திருப்பூர், ஈரோடு, கோடைக்கானல், உதகமண்டலம் குடிநீர்த் திட்டங்களை விரைவு படுத்த வேண்டி, அரசு ஆணை (நிலை) எண் 1551, பொது துறை, நாள் 12—8—1986-ல் ஒரு உயர் அதிகாரியினால் கண்காணிக்கப் பட்டு வருவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. உயர் நீதி மன்றத்தில் வழக்கு முடிந்தவுடன் தலைமை நீர்ப்பிடிக்கும் இடம் கட்டப்பட்டு இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

(இ) விளாத்திகுளம் தொகுதியில் சில பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. குமரகுருபர ராம நாதன் மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். அவர் இருக்கை யில் இல்லை. ஆகவே அறிக்கை அவையின் முன் வைக்கப்படு கிறது.

"விளாத்திகுளம் தொகுதியைச் சார்ந்த ஓட்டப்பிடாரம் ஒன்றியத்திலுள்ள தருவைக்குளம், பட்டினமருதூர், பனையூர், பலாப்பட்டி, மேல்மருதூர், குமாரபுரம், தலவாய்புரம், வடக்கு கல்மேடு, தெற்கு கல்மேடு, வேப்பலோடை, வல்லிநாயகிபுரம், சண்முகபுரம், வேடநத்தம், வெங்கடாசலபுரம், புளியமரத்து அரசடி, மேலஅரசடி ஆகிய கிராமங்களிலும் விளாத்திக்குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த குளத்தூர், பனையூர், கல்லூரணி, அகமதுபுரம், குண்டபெருமாள்புரம், கே. துரைசாமிபுரம், படர்ந்தபளி, நெடுங்குளம், கன்னிமார்கூட்டம், பல்லாகுளம், பெரியசாமிபுரம் ஆகிய கிராமங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாமையும் நிலத்தடி நீர் உப்பு நீராக உள்ளதாகவும்,

TRUTH ALONE TRIUMPHS